முதன்மை மாவட்ட நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி

O.S .No. 69/2018

19.12.2019

DW-2: பெயர் : திரு. ரமேஷ்

மேற்படி சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை.**

என் பெயர் ரமேஷ் அல்லது புத்தூர் ரமேஷ் என்றால் ரமேஷ். வா.த.சா.ஆ. 6 ல் புத்தூர் ரமேஷ் என்று உள்ளது. என் தகப்பனாருக்கும் புத்தூர் ராஜா என்று ஒரு பெயர் உள்ளது என்றால் சரிதான். 2010 ல் என் தகப்பனார் எங்கு வேலை பார்த்தார் என்றால் கால் டேக்சியில் வேலை பார்த்தார். சாட்சி பாடாலீஸ்வரன் பாலக்கரை போலீஸ் நிலயத்தில் கொடுத்த புகாரின் பேரில் எவ்வளவு அபராதம் கட்டினேன் என்றா் ரூ. 1,000/- கட்டினேன். என் மீது செக் மோசடி வழக்கு உள்ளதா என்றால் இல்லை. 2010 ல் வெளிநாடு சென்று விட்டு 2012 ல் திரும்பி வந்துவிட்டேன். நான் டிப்ளமோ இஇஇ படித்துள்ளேன். நான் பாதியிலேயே படிப்பை நிறுத்திவிட்டேன் என்றால் சரியல்ல. வெளிநாட்டில் இருந்து என் தகப்பனாருக்கு வெஸ்டன் மணி டிரான்ஸ்பர் மூலமாக பணம் அனுப்பினேன். 2013 ல் தான் நான் வங்கி கணக்கு தொடங்கியுள்ளதாக சொல்லியுள்ளேன் என்றும், அதனால் நான் பணம் அனுப்பியிருக்க முடியாது என்றும் சொன்னால் சரியல்ல. வங்கி கணக்கு இல்லாமலேயே அனுப்பலாம். நான் வெளிநாட்டிற்கு டூரிஸ்ட் விசா மூலம் தான் சென்று வந்தேன் என்றால் சரியல்ல. நான் வங்கியில் கடன் எதுவும் வாங்கவில்லை என்றும், வாங்கியிருந்தால் ஆவணம் தாக்கல் செய்திருப்பேன் என்றும் சொன்னால் சரியல்ல.